அலுவலகம் செல்லும் / செல்லவிருக்கும் எல்லாப் பெண்களுக்கும் பயனுள்ள அட்டகாசத் தொடர்!

5

# ஆ.ஃ.பிஸ் எனும் சொர்க்கம்!




சுமதி நாராயணன்

மனித வள மேம்பாட்டு ஆலோசகர்


'ஹிட்லர்', 'சிடுமூஞ்சி', இப்படி பல பெயர் உள்ளவர் இவர். பெரும்பாலான நிறுவனங்களில் மிக முக்கியமான பதவி வகிப்பவர். இவர் இல்லாமல் நிறுவனங்கள் கிடையாது என சொல்லலாம். பலநேரங்களில் வேலையைப் பற்றி ரொம்ப தெரியா விட்டாலும் இவரால் தான் எல்லா வேலையும் நடக்கின்றது என்றொரு பிரமையில் இருப்பவர், என பலரால் பேசப்படுகின்ற இவர் யார்?

சரியாக ஊகித்து விட்டீர்கள். இவர்தான் 'பாஸ்' என்கிற மேலதிகாரி.

மேலதிகாரி என்பவர் நமது வேலை வாழ்க்கையில் மிக முக்கியமானவர். இவர் தமது ஆஃபிஸை சொர்க்கமாகவும் ஆக்கலாம். அல்லது நரகமாகவும் ஆக்கலாம்.

பல நிறுவனங்களில் வேலையை விடுவதற்கு முக்கியமான காரணம் மேலதிகாரி, அவருடன் ஒத்துப்போக முடியாமை என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாஸுடன் நல்லுறவு மிகமுக்கியம். மாமியாருடன் உறவுபோல். உறவு நன்றாக இருந்தால் பிரச்னை அதிகம் இல்லாமல் இருக்கும். உறவில் நெருடல் இருந்தால் தினமும் மல்லுக்கட்ட வேண்டியதுதான்.ஒவ்வொரு விஷயத்திற்கும் பாஸை சரிக்கட்டுவதற்கே நேரம் வீணாகி. சோர்ந்து போய் விடுவோம்.

இந்த விஷயத்தை இரண்டு விதமாக அணுகலாம். ஒன்று சகித்துக் கொண்டுபோவது. இன்னொன்று மதித்துக் கொண்டு போவது.சகிப்பது நமக்கு கை வந்தகலை. இல்லையா? ஆனால் இதில் மகிழ்ச்சி இல்லை, நிம்மதி இல்லை, வளர்ச்சி கடினம், கசப்பு அதிகம். சகிப்பது கொஞ்ச தூரம்தான் நம்மைக் கொண்டு போகும்.

பாஸை மதிப்பதா? சான்ஸே இல்லை- என நினைக்கிறீர்களா? அப்படி நினைப்பதற்குக் காரணம் இருக்கலாம். அவரிடம் வதைபட்டு, திட்டு வாங்கி, புண்பட்டு என்றொரு அவமானச் சரித்திரம் இருக்கலாம். அப்படிப் பட்டவரை மதிப்பதா?

யோசியுங்கள்.நீங்கள் உங்கள் பாஸை தேர்ந்தெடுக்கவில்லை.நாம் தேர்ந்தெடுப்பது நிறுவனத்தை மட்டும்தான். யாருடன் வேலை செய்வது என்ற தீர்மானம் நமது கையில் இல்லை. அதேமாதிரி பாஸும் தமது கீழே வேலை செய்கிறவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. யார் அமைகிறார்களோ அவர்களோடு வேலை செய்ய வேண்டியதுதான்.

இப்படி அமைந்த இந்த உறவைக் காக்க வில்லையெனில், விரக்தியில் முடியும். இந்த முக்கியமான உறவைக் காக்க என்ன செய்யலாம்?

முதலில்யோசித்து ஏற்றுக் கொள்ளவேண்டியது என்னவென்றால், இந்த உறவு ரொம்ப நாசுக்கானது.பாஸுடன் நல்லுறவு வேண்டும் ஆனால் ரொம்ப அண்மை கூடாது. பாஸ் ஆனவர், நண்பர்போல் இருக்க வேண்டும் ஆனால் அதற்கும் எல்லைகள் உண்டு.

இரண்டு தரப்பிலிருந்தும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றது. எப்படிப்பட்ட பாஸ் வேண்டும் எனக் கேட்டால் - என்னை மதிக்கின்றவர், எனக்கு வேலை

இந்தப் பகுதியில்
நீங்களும் இடம்பெற
வேண்டுமென்றால்,
அலுவலகப்
பின்னணியில் வித்தியாசமான
சூழ்நிலைகளில் தங்களுடைய
சமீபத்திய
புகைப்படம் + பேட்டாவை
mangayarmalar@kalkiweekly.com
இ மெயிலில் மட்டுமே
அனுப்பவும்.
கடைசித் தேதி: 10.04.2014

யில் ஏதாவது தெரியா விட்டால் கற்றுக் கொடுத்து உதவி செய்பவர் முழுசுதந்திரம் கொடுப்பவர், என் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர் என ஒரு லிஸ்ட் வரும் அதனுடன் சொல்லாதது, என் குறைகளைப் பெரிசு படுத்தாதவர், தவறுகளைப் பெரிதாக்காமல் இருப்பவர், அதிக வேலை வாங்காமல் இருப்பவர், என ஒரு பட்டியல் மனதில் ஓடும்.

இதையே பாஸிடம் கேட்டால், 'எனக்குக் கீழே வேலை செய்பவர் என்னை மதிப்பவர், சொன்ன வேலையைச் சரியாகச் செய்பவர், எதிர்த்துப் பேசாதவர், சமயோசித புத்தியை நன்கு உபயோகிப்பவர், என்வேலையை எளிதாக்குபவர்' என அவருடைய பட்டியல்வரும். அதனுடன் சொல்லாதது 'என் இடத்தைப் பிடிக்கப்பார்க்காதவர், சிலநேரங்களில் என் அறி யாமையை தவறுகளை வெளியே தெரியப்படுத்தாமல் இருப்பவர், என்னை விட புத்திசாலியாகத் தன்னைக் காட்டி கொள்ளாதவர் இப்படி தனி லிஸ்ட் இருக்கும்.




'இரண்டு பேருக்கும் பரஸ்பரம் நல்ல உறவு வேண்டும் ஆனால் பாஸ் இல்லாமல் என்னால் சமாளிக்க முடியும்' என்று ஊழி யருக்கு ஒரு எண்ணம், அதைப் போல் 'ஊழியர் இல்லாமல் கடினம்; ஆனாலும் அவர் தேவை எனக்கு இல்லை' என்ற எண்ணம் பாஸுக்கு இருக்கும்.

டாம் - பூனையும் ஜெர்ரி எலியையும் போல் அல்லது கத்திமுனை போல். இருக்கும் இந்த உறவில் எப்பொழுது பிரச்னை? ஊழியரின் உழைப் பிற்கு சரிவரமதிப்பு இல்லாவிட்டால், அவர்செய்த வேலையை மேலதிகாரியானவர் தனக்கு சாதகமாக்கிக் கொண்டால், இரண்டு பேருடைய 'ஈகோ'வும் தலையெடுத்தால், வேலைசெய்யும் பொழுது தலையிட்டால், முடிவுகள் எடுக்கும் சுதந்திரம் இல்லாவிட்டால், ஊழியரின் வளர்ச் சிக்குத் தடையாக இருந்தால் எனப் பல காரணங் கள் இருக்கின்றன.

தன்கீழ் வேலை செய்பவர்களின் திறன்களை வளர்ப்பதற்கு வழிகாட்டியாக சில பாஸ்கள் உண்டு. வேலையில் அப்பழுக்கற்ற விதம் மற்றும் ஊழியர் களை ஊக்குவிப்பவராக இருப்பார்கள். இவர்கள் கீழேவேலை செய்வது வாழ்க்கையில் மறக்க முடியாததாக இருக்கும். முன்னேற்றத்திற்கும் பெரிய பாலமாக இருப்பார்கள்.

உங்களுடைய உறவு பாஸுடன் எப்படி உள்ளது என்பதைப் பற்றி யோசிப்பது அவசியம்.நெருடல் இல்லாத உறவை வளர்ப்பது முதல்கட்டம். நமக்கு திறன் இருக்கு என்பதை உணர்த்தி அவருடைய நம்பிக்கை பெறுவது அடுத்தக்கட்டம். வேலையைத் திறம்பட செய்து தானும் முன்னேறி மேலதிகாரியும் நிறுவனமும் முன்னேறுவதற்கு ஒத்துழைப்பது அடுத்தக்கட்டம்.

பாஸுடன் நல்லுறவை வளர்ப்பதற்கு கடந்த இதழில் கொடுத்த டிப்ஸ் மிகவும்உதவும்.இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது - அவரையும் பதவியையும் மதிப்பது.

நளினி நன்கு படித்து வேலைதிறன் உள்ள பெண். இவருக்கு மானேஜராக ப்ரமோஷன் கிடைத்தது.